# 7

# பாடுதலுடன் ஆராதனை

தேவனை ஆராதிப்பதில் பாடுதல் என்பது கிறிஸ்தவத்தின் மாபெரும் சந்தோஷங்களில் ஒன்றாக உள்ளது. இயேசுவும் மற்றும் அப்போஸ்தலர்களும் கீர்த்தனைகளை (Gk.: *humneo*; மத்தேயு 26:30; மாற்கு 14:26) பாடினர், பவுலும் மற்றும் சீலாவும் இதைச் செய்தனர் (நடபடிகள் 16:25). பரலோகத்தில் இருப்பவர்களும் பாடுவதாகச் சித்தரிக்கப்பட்டுள்ளனர் (Gk.: *ado*; வெளிப்படுத்தின விசேஷம் 5:9; 14:3; 15:3).[1]

எபேசியர் 5:19, கொலோசெயர் 3:16, மற்றும் யாக்கோபு 5:13 ஆகிய வசனங்களில் கிறிஸ்தவர்கள் பாடும்படிக்கு ஊக்கப்படுத்தப்பட்டுள்ளனர். நமது பாடுதல்கள் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளுதலையும் நமது இருதயங்களில் பக்தியுடன் பாடுதலையும் உள்ளடக்க வேண்டும் என்று இவ்வசனங்கள் நமக்குக் கூறுகின்றன. நாம் கிறிஸ்துவின் வசனத்தைப் பாடி, ஒருவருக்கொருவர் போதித்துப் புத்திசொல்ல வேண்டும். நமது பாடுதல் என்பது கர்த்தருக்கு நன்றிநிறைந்த தன்மையை எடுத்துரைக்கவும், நமது சந்தோஷத்தை வெளிப்படுத்தவும், மற்றும் துதிகளை வெளிப்படுத்தவும் முடியும்.

கிறிஸ்தவ செயல்கள் யாவற்றிலும், பாடுதல் என்ற ஒன்று மாத்திரமே இசைவிணக்கமான குரல்களுடன் சபையார் யாவரும் பங்கேற்கும் நிகழ்ச்சியாக உள்ளது. பாடுதல் என்பதில் உள்ளதுபோன்று, கிறிஸ்தவ செயல்கள் வேறு எதிலும், ஒரேவேளையில் யாவரும் ஈடுபட்டு ஆராதனை அனுபவத்தைக் கூட்டுவதில்லை. இசையில் குரல்கள் கலந்து, அத்துடன் பாடுதலில் தேவனைத் துதிப்பதினால் ஆவிகள் ஒன்றுகலந்து இருக்கும் நிலையானது, கிறிஸ்தவ ஆராதனையில் மிகவும் சந்தோஷமான மற்றும் மேல் உயர்த்தும் தருணத்தைக் கொண்டுவர முடியும்.

நமது பாடுதலில் பல ஆய்வுக்கருத்துகள் உள்ளடக்கப்படக் கூடும்:

- புத்திசொல்லுதல்
- இருதய விருப்பம், நம்பிக்கை, பரலோகம்
- ஆறுதலும் மற்றும் தேறுதலும்
- சார்ந்திருத்தல், அருளிரக்கம், நம்பியிருத்தல், வழிகாட்டுதல்
- தியானம், பரிசுத்தப்படுத்துதல், மற்றும் அர்ப்பணித்தல்
- ஊக்கப்படுத்துதல் மற்றும் அழைப்பு
- பற்றுறுதி
- ஊழியம், ஆத்தும-ஆதாயம், மற்றும் சேவித்தல்
- சமாதானம் மற்றும் மனநிறைவு
- தேவனைத் துதித்து மற்றும் வழிபடுதல்

- மன்றாடுதல், வேண்டுதல்கள், விண்ணப்பங்கள், மற்றும் உதவிக்காக முறையிடுதல்
- போதித்தல்
- நன்றிசெலுத்துதல் மற்றும் களிகூருதல்
- நம்புதல், விசுவாசித்தல், தைரியம் கொள்ளுதல், உறுதிப்பாடு

நாம் நமது இருதயத்தில் இருந்து பாட வேண்டும் (எபேசியர் 5:19; கொலோசெயர் 3:16). இது தனிநபர் ஒருவரால் தனியாக இருக்கும்போது, இன்னொரு நபருடன் சேர்ந்து, ஒரு சிறுகுழுவில், அல்லது சபையார் யாவரும் சேர்ந்து செய்யும் ஆராதனையில் செய்யப்பட முடியும்.

பாடுதல் என்பது பலவகையிலான பயன்களை அளிக்க முடியும். அது நமக்குத் தேவனுடனும் மற்றவர்களுடனும் நெருக்கமான உறவுகளை மேம்படுத்த உதவக்கூடும். பாடுதல் என்பது தனிப்பட்ட பிரச்சனைகளைக் குறைத்து, ஆவிக்குரிய உற்சாகத்தை அதிகரிக்கச் செய்து, கிறிஸ்தவ வாழ்க்கைக்கு ஊக்கத்தைத் தர முடியும். கிறிஸ்தவப் பாடல் களின் வனப்பு நிறைந்த வார்த்தைகள் நமக்கு தேவனுடைய வழிகளைப் பற்றி அறிவுறுத்தி, நமது ஆவிகளையும் மற்றவர்களின் ஆவிகளையும் உயர்த்த முடியும். பாடுதல் என்பது நம்மைக் குறித்தும் பிறரைக் குறித்தும் நாம் கொண்டுள்ள இரக்கமற்ற உணர்வுகளை நீக்க முடியும். அது ஆராதனையின் தொனியை அமைக்கவோ அல்லது அன்றன்றைய தினத்திற்கான மனநிலையை அமைக்கவோ முடியும்.

பாடுதலில் மிக அதிகமானதை இட்டு, அதில் இருந்து மிக அதிகமானதைப் பெறுவதற்கு, நாம் தேவனுடன் செய்தித்தொடர்பு கொண்டுள்ளோம் என்பதை உணர்ந்தவர்களாக இருக்க வேண்டும். நாம் அவரது இருப்பின் உண்மைத் தன்மையின்மீது கவனத்தை ஒருநிலைப்படுத்தி, பாடலுடன் தொடர்பில்லாத சிந்தனைகளை உணர்வுடன் நீக்கிப்போட வேண்டும். நாம் பாடுகையில், தேவனுடைய பிரசன்னத்தில் இருத்தலின் அர்த்தத்தை ஆழ்ந்து கண்ணோக்குபவர்களாகவும் கர்த்தருடன் நமது உறவுமுறையை பற்றி நினைப்பவர்களாகவும் இருக்க வேண்டும். தேவனுடைய மாபெரும் தன்மையுடன் ஒப்பிடுகையில் நமது தகுதியின்மையை நாம் உணர்ந்தறிய வேண்டும். நாம் தேவனிடத்தில் இருந்து பெற்றுக் கொண்டுள்ள பயன்கள், உதவிகள் ஆகியவற்றைப் பற்றித் தியானித்தல் என்பது அவரது நற்தன்மை, இரக்கம் மற்றும் அவரை நாம் சார்ந்திருத்தல் ஆகியவற்றைப் பற்றி நாம் உணர்ந்தறிய உதவும்.

நாம் தேவனிடத்தில் பயபக்தியான எண்ணப்போக்கை வளர்த்துக் கொண்டாக வேண்டும் என்பதுடன், நம்மைச் சுற்றி இருப்பவர்களிடத்தில் ஆவிக்குரிய வகையில் நெருங்கியிருத்தலையும் வளர்த்துக்கொள்ள வேண்டும். இது நாம் பாடுகையில் ஒருவருக்கொருவர் தருகிற போதனை மற்றும் புத்திகூறுதல் ஆகியவற்றைப் பற்றி நம்மை அதிகம் அறியச் செய்யும். பாடுவதற்கு முன்பு பாடல்களின் வரிகளை வாசித்தல் என்பது அவற்றில் வெளிப்படுத்தப்பட்டுள்ள செய்திகளைப் புரிந்துகொள்ள உதவிசெய்யும் நடைமுறையாக உள்ளது. அந்தப்பாடல் நமக்கும்

நம்மைச் சுற்றியுள்ளவர்களுக்கும் எவ்வாறு உதவக்கூடும் என்று நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். பாடலின் வார்த்தைகள் [அவற்றைப்] பாடும் தருணத்தின் அமைவிற்கு ஏற்புடையதாக இருக்க வேண்டும்.

ஆராதனை என்பது நாம் மற்ற மக்களுடன்கூடி வந்திருந்தபோதிலும், தனிநபருக்குரிய விஷயமாகும். மற்ற மக்கள் நமக்காக ஆராதிக்க இயலாது. நாம் ஆவிக்குரிய வகையில் ஈடுபடும்போது மாத்திரமே நாம் ஆராதிக் கிறோம் என்பதை நாம் உணர்ந்தறிய வேண்டும்.

## பாடல் நடத்துனர்

"சகலமும் நல்லொழுக்கமாயும் கிரமமாயும் செய்யப்படக்கடவது" என்ற அறிவுறுத்துதலில் (1 கொரிந்தியர் 14:40) பாடல் நடத்துனரின் பணிப்பொறுப்பு மறைமுகமாக உணர்த்தப்பட்டுள்ளது. யாரேனும் ஒருவர் வார்த்தைகள், ராகம், மற்றும் தாளம் ஆகியவற்றுடன் பாடல் ஒன்றைத் தொடங்கியாக வேண்டும். இதை யார்செய்ய வேண்டும், அவர் எங்கே யிருந்து இதைச் செய்ய வேண்டும், அவர் பாடல்களை எவ்வாறு தேர்வு செய்ய வேண்டும், பாடப்பட வேண்டிய பாடல்களை மற்றவர்களுக்கு அறிவித்தல், அல்லது ராகத்தைப் பெற்றுக்கொள்ளுதல் போன்றவை எடுத்துரைக்கப்படவில்லை. ஏனென்றால் இவ்விஷயங்களைப் பொறுத்த மட்டில் தேவன் தெரிவுகள் எதையும் ஏற்படுத்தவில்லை, மூப்பர்கள் (அல்லது மூப்பர்கள் இல்லாத சபையில் அதன் உறுப்பினர்கள்) தங்கள் சொந்த விருப்பங்களின்படி இவற்றை ஏற்படுத்திக்கொள்ளச் சுதந்திரம் பெற்றுள்ளனர்.

பாடல் நடத்துனர் பாடுதலைப் பல வழிகளில் மேம்படுத்த முடியும். அவர் தாம் தேர்ந்தெடுக்கும் பாடல்களில் பலவற்றை சபையார் யாவரும் அறிந்துள்ளனரா என்பதை உறுதிப்படுத்திக்கொண்டு, ஒரு சிலர் மாத்திரமே பாடக்கூடிய கடினமான பாடல்களைத் தவிர்க்க வேண்டும். அதே வேளையில், அவர் தெரிவுசெய்தல்களில் பலவகைப்பாடு கொண்டிருத்த லுடன் ஒவ்வொரு ஆராதனையிலும் ஒருசில பாடல்களையே திரும்பத் திரும்பப் பாடுதல் என்பதில் இருந்து விலகியிருக்க வேண்டும். புதிய கீர்த்தனைகள் பயிற்சி வகுப்பு ஒன்றில் பயிலப்பட வேண்டும்.

பாடல்களைத் தெரிவு செய்பவர் முன்சிந்தனையைப் பயன்படுத்த வேண்டும். அந்தந்த வேளைக்குத் தகுந்தாற்போன்ற பாடல்களைத் தேர்வு செய்யும் பொறுப்பை அவர் கொண்டுள்ளார். ஒருவேளை அவர் பிரசங் கத்தின் கருத்திற்கு இணையான வகையில் உள்ள ஆய்வுக்கருத்தைப் பற்றிய பாடல்களைத் தேர்ந்து எடுத்து, ஆராதனைச் சூழலைக் கட்டியெழுப்பலாம்.

ஆராதனையின்போது, பாடலுடன் ஆராதிக்கும்படி சபைக்குழு மத்தை நடத்துனர் அழைக்கிறார். அவர் ஒவ்வொரு பாடலையும் அறிமுகப் படுத்தி, அர்த்தம் நிறைந்த சொற்றொடர்களின்மீது கவனம் செலுத்தும்படி அழைத்து, சுலபமாகப் புரிந்துகொள்ள இயலாத கவிதைத்துவச் சிந்தனைகளை விளக்கியுரைப்பதன்மூலம் ஆராதிப்பவர்கள் தங்களைத் தகுதியான சிந்தை அமைவில் வைத்துக்கொள்ள உதவ முடியும். அவர்

பாடலின் உணர்வுக்குத் தகுந்தாற்போன்று அதன் லயத்தையும் மற்றும் ஒலிஅளவையும் அமைக்க வேண்டும். அவர் ஆராதனையில் இருந்து கவனத்தை விலக்கும் நகைச்சுவை அல்லது பிற கவனவிலக்கங்களைத் தவிர்க்க வேண்டும்.

அவர் தாம் ஒரு நிகழ்ச்சி நிகழ்த்துபவர் அல்ல, ஆனால் நடத்துனர் என்பதை நினைவில் கொண்டு, பாடல்களை போலித்தனமில்லாத வகையில் நடத்த வேண்டும். அவர் [பிறர்] கேட்கக்கூடிய அளவிற்கு சத்த மாகப் பாட வேண்டும், ஆனால் அது அவரைநோக்கி கவனத்தை ஈர்ப்பதாக இருக்கக் கூடாது. தம்மையல்ல, தேவனை உயர்த்துவதே ஆராதனையில் சபைக்குழுமத்தை நடத்துவதில் அவரது நோக்கமாக உள்ளது.

## சபைக்குழுமம்

சபைக்குழுமம் பாடுதலை அர்த்தம் நிறைந்ததாகவும் மேல்நோக்கி உயர்த்துவதாகவும் செய்வதற்குச் சபைக்குழுமம் பல விஷயங்களைச் செய்ய முடியும். கூடுமானால் பாடல்புத்தகம் இன்றியே பாடுதலின்மூலம் ஆராதனை மேம்படுத்தப்பட முடியும். நாம் இல்லத்தில் பாடுவதினால் பாடல் புத்தகத்தில் உள்ள பாடல்களைக் கற்றுக்கொள்ள முடியும்.

ஆராதிப்பவர்கள் பாடல்களின் வார்த்தைகளை இருதயத்தில் இருந்து வெளிப்படுத்த வேண்டும். நாம் தேவன்மீதும் சபைக்குழுமத்தில் உள்ள மற்றவர்களின் தேவைகள்மீதும் கவனம்செலுத்த வேண்டும்.

சபைக்குழுமமானது பாடல் நடத்துனரைக் கவனிப்பதன்மூலம், பாடலை ஒருமைப்பாட்டுடன் பாடமுடியும். ஒவ்வொரு உறுப்பினரும் தான் பாடுதல் என்பது தன்னைச் சுற்றிலும் உள்ளவர்கள் பாடுதலை காட்டிலும் மேலாகக் கேட்கப்படும்படி பாடுவதற்குப் பதிலாகத் தமது குரலைப் பிறருடைய குரல்களோடு ஒன்றுகலக்கச் செய்வதை நாட வேண்டும். மற்றவர்களுடன் நெருங்கி அமர்தல் என்பது அவர்களின் குரல் களுடனும் இருதயங்களுடன் ஒன்றுகலப்பதை மேம்படுத்தக் கூடும்.

ஆராதனையில் பாடுதலுக்கு உணர்வுப் பூர்வமான முயற்சி அவசியமாக உள்ளது. நாம் பாடுகிறோம் என்ற உண்மையானது, நாம் ஆராதிக்கிறோம் என்று அர்த்தப்படுத்துவதில்லை. நாம் வார்த்தைகள்மீது கவனம் குவித்து கர்த்தருக்கு நமது இருதயங்களில் இசையை ஏற்படுத்துகின்றபோதுதான் நாம் நம் பாடுதலுடன் உண்மையிலேயே ஆராதிக்கிறோம்.

## வாய்ப்பாட்டு

பழைய ஏற்பாட்டு ஆராதனையில் பல்வேறு இசைக்கருவிகள் பயன்படுத்தப்பட்டிருப்பினும், கிறிஸ்தவர்கள் தொடக்கத்தில் இருந்தே, இசைக்கருவிகள் எதுவுமின்றி cappella எனப்பட்ட வாய்ப்பாட்டை பாடினர். “A cappella” என்பது “… இசைக்கருவிகளின் துணையற்றது என்று அர்த்தப்படுகிறது. [Ital.: *a*, in the manner of + *cappella*, chapel, choir.]”[2]

> இது சபையின் பாடல் என்பது [இசைக்கருவிகளின் துணையற்ற] குரல்களுக்காக எழுதப்பட்ட பதினாறாம் நூற்றாண்டு வரையிலான

> *காலத்தை உள்ளடக்கிய காலப்பகுதி வரையிலானதைக் குறிக்கிறது. ... ஆகவே தற்போதய நாட்களில் குழுவாகப் பாடுதல் என்பது "[இசைக்கருவிகளின்] துணையின்றி" என்பதற்கான ஒரு பொருட்பல சொல்லாக அடிக்கடி பயன்படுத்தப்படுகிறது.*[3]

துவக்ககால சபையில் வாயால் பாடுதல் என்பது மாத்திரமே நடைமுறையில் இருந்ததால் ''a cappella'' அல்லது "வாய்ப்பாட்டு" என்று வெளிப்படுத்துதல் தோற்றுவிக்கப்பட்டது.

இசைக்கருவிகளின் துணை என்பது புதிய ஏற்பாட்டு காலத்தில் *psalmos* அல்லது வினைச்சொல்லினுடைய வேர்வார்த்தையான *psallo* என்பதில் உள்ளடங்கவில்லை. இலக்கிய கிரேக்க மொழியில், *psallo* என்பது ஒரு வில்லின் நாண், அல்லது சுரமண்டலத்தை மீட்டுதல் என்பதில் நடக்கும், இழுத்து அதிரச் செய்தல், அதிர்வு ஏற்படுத்துதல் அல்லது அதிர்வுக்குக் காரணமாகுதல் என்று அர்த்தப்பட்டது. சாதாரண மக்களின் கிரேக்க மொழியான கொய்னீ கிரேக்க மொழியும், புதிய ஏற்பாட்டு கிரேக்க மொழியும் இலக்கிய கிரேக்க மொழியில் இருந்து வேறுபடுகிறது. *Psallo* என்பதன் மேம்பாட்டில், இவ்வார்த்தையானது பாடுதலில் வாய்ப்பாட்டுக் குரல்களை அல்லது பாடுதலில் இணைவு பெற்ற இருதயத்தின் அதிர்வுகளை அதிரச் செய்தல் என்பதைக் குறிக்க வந்தது. இந்தப் பிந்திய கருத்தில் "உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம்பண்ணி" என்று பவுல் இதைப் பயன்படுத்தினார் (எபேசியர் 5:19). *Psallo* என்ற வினைச்சொல்லின் விளக்கத்தை உள்ளடங்கும் அகராதியின்[4] சமீபத்திய பதிப்பொன்று மதிப்புக்குரிய கல்வியாளர்களுடனும் மற்றும் தனது முந்திய பதிப்பில் இருந்தும்கூட கருத்து வேறுபடுகிறது.

கிறிஸ்தவப் பாடுதலில் "சங்கீதங்கள், கீர்த்தனைகள் மற்றும் ஞானப் பாடல்கள்'' ஆகியவை உள்ளடக்கப்பட வேண்டியதாயிருக்கிறது (எபேசியர் 5:19; கொலோசெயர் 3:16). இம்மூன்று சொற்றொடர்களையும் வித்தியாசப்படுத்தும் கோடு சுலபமாக வரையப்படுவதில்லை. இவைகள் சாத்தியமான பாடல் வடிவங்களாக உள்ளன. சிலர் ''சங்கீதங்கள்'' என்பது பழைய ஏற்பாட்டு சங்கீதங்களை அல்லது இசைக்கருவிகளின் துணையுடன் பாடும் பாடல்களை அர்த்தப்படுத்துகிறது என்று கருத்துத் தெரிவித்துள்ளனர். கிறிஸ்தவர்கள் தங்கள் பாடல்களில், சங்கீதங்களின் அழகுமிக்க சிந்தனைகளை உள்ளடக்க முடியும் என்றாலும், "கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக'' என்பது கொலோசெயர் 3:16ல் உள்ள அறிவுறுத்தலாக இருக்கிறது. கிறிஸ்துவின் வசனங்கள் சங்கீதங்களில் காணப்படுவதில்லை.

### வாய்ப்பாட்டிற்கு மாத்திரமே அதிகாரம்/அங்கீகாரம் உள்ளது

ஆராதனையில் பாடுதலைப் பாட புதிய ஏற்பாடு அங்கீரிக்கிறது, வழங்குகிறது. பாடுதலுடன் இசைக்கருவிகளைச் சேர்க்கிறவர்கள் அங்கீகாரமற்ற நடவடிக்கைகளைச் சேர்க்கின்றனர். ஆராதனையில் கிறிஸ்தவர்கள் இசைக்கருவிகளின் துணையுடன் பாடலாம் அல்லது இசைக்கருவியை மீட்டலாம் என்று புதிய ஏற்பாட்டில் எந்த ஒரு வசனப்பகுதியும்

அறிவுறுத்துவதில்லை.

"பாடுதல்" என்பதே கிறிஸ்தவர்களுக்கு இசை பற்றிய ஒரே தெரிவாக இருந்துள்ளது (எபேசியர் 5:19; கொலோசெயர் 3:16). வேறு எவ்வகையான இசையும் தேர்ந்துகொள்ளப்படுவதில்லை என்ற உண்மையானது நம்மைப் பாடுதலுடன் வரையறைப்படுத்துவதாக உள்ளது. இசைக்கருவிகள் எதையும் தேர்ந்துகொள்வதற்கு நமக்கு அதிகாரம் அளிக்கப்படவில்லை.

நாம் பயன்படுத்த வேண்டிய இசையின் வகையை இயேசு தேர்ந்து கொண்டுள்ளார், எனவே நாம் அந்தத் தேர்வுடன் வரையறைப்படுத்தப் பட்டுள்ளோம்.[5] பாடுதலின் வகை அல்லது பாணியைப் பற்றி அவர் தெரிந்துகொள்ளுதல் எதையும் ஏற்படுத்தவில்லை. பல்வேறு வகையான பாடல்களைப் பாடுதல் மற்றும் பாடல் ஏற்பாடுகளைச் செய்தல் ஆகிய வற்றிற்கு நாம் சுதந்தரம் கொண்டுள்ளோம். சோப்ரனோ, அல்ட்டோ, டெனர், அல்லது பேஸ் [தமிழ் இசைமுறைப்படி கூறுவதென்றால், உச்ச ஸ்தாயி, கீச்சுக்குரல், ஸ்வரபேதம் அல்லது அடிக்கட்டைத் தொனி] போன்ற வற்றில் பாடுதல் என்பது "பாடி" என்ற கட்டளையுடன் ஒன்றைக் கூட்டு வதாக இருப்பதில்லை, அல்லது அது இயேசுவின் அதிகாரத்தை மீறுவதும் இல்லை, ஏனெனில் இந்த வட்டாரங்களில் அவர் எந்த ஒரு தெரிவையும் ஏற்படுத்தவில்லை.

இயேசுவின் எந்த போதனையின் அடிப்படையிலும், இசைக்கருவிகள் ஆராதனையில் அறிமுகப்படுத்தப்பட இயலாது. மனிதருடைய பாரம் பரியங்களின் அடிப்படையில் மாத்திரமே அவைகள் அறிமுகப்படுத்தப்பட முடியும். மனிதரால் ஏற்படுத்தப்பட்ட பாரம்பரியங்கள் தேவனை ஆராதிப்பதில் மதிப்பற்றவைகளாக உள்ளன மற்றும் அவைகள் புறக் கணிக்கப்பட வேண்டியவைகளாக உள்ளன (மாற்கு 7:7-13; கொலோசெயர் 2:8; தீத்து 1:14).

### நியாயப்பிரமாணத்தின்கீழ் இசைக்கருவிகளைப் பற்றிய விஷயம் என்ன?

தேவாலய ஆராதனையில் இசைக்கருவிகள் பயன்படுத்தப்பட்டன. அவைகளைத் தேவன் நியாயப்பிரமாணத்திற்கு முன்பும், நியாயப்பிரமா ணத்தின் கீழும் ஏற்றுக்கொண்டார் என்றால், இப்போதும் அவர் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வாதிடுகின்றனர். இது தொடருவதில்லை. தேவன் கிறிஸ்தவ யுகத்திற்கு முன்பு பல்வேறு நடைமுறைகளை ஏற்றுக் கொண்டிருந்தார்: உதாரணத்திற்கு, ஆராதனை எருசலேமுடன் கட்டுப் படுத்தப்பட்டது, பல மனைவிகள், ஆராதனையில் மிருகபலி, கட்டளை யிடப்பட்ட தசமபாகம், கடப்பாடுள்ள யூதத்துவப் பண்டிகைகள், மற்றும் தூபம் போன்றவை. புதிய உடன்படிக்கையின் தொடக்கத்துடன், பழைய உடன்படிக்கையானது அதன் கட்டளைகள், ஆணைகள், மற்றும் நடை முறைகள் யாவற்றுடனும் புறம்பே ஒதுக்கப்பட்டது (கலாத்தியர் 3:24, 25; எபேசியர் 2:14, 15; எபிரெயர் 7:19; 10:9).

நியாயப்பிரமாணம் அதன்கீழ் வாழ்ந்தவர்களை நியாயந்தீர்க்கப் பயன்படுத்தப்படும் (ரோமர் 2:12). இந்தக் காலத்தில் நாம் நியாயப்பிரமா

ணத்தின்கீழ் இருப்பதில்லை (ரோமர் 6:14, 15), எனவே நாம் நியாயப்பிரமாணத்தினால் நியாயந்தீர்க்கப்படமாட்டோம். நாம் இயேசுவின் வசனத்தைக் கொண்டு நியாயந்தீர்க்கப்படுவோம் (யோவான் 12:48). இந்தக் காரணத்தினால், கிறிஸ்தவர்கள் ஆராதனையில் ஏற்புடையது எது என்பதைத் தீர்மானிக்கப் பழைய ஏற்பாட்டைப் பின்பற்றத் தேவையில்லை. நாம் தேவனை ஆராதிப்பதில் பயன்படுத்த வேண்டியது என்ன என்பதைக் கற்பதற்காக, நாம் புதிய உடன்படிக்கையை படிக்க வேண்டும். இசைக்கருவிகள் ஆராதனையின் ஒரு பாகமாகக் கட்டளையிடப்படவில்லை என்பதால், அவைகள் நமது ஆராதனையில் பயன்படுத்தப்படக்கூடாது.

**வெளிப்படுத்தின விசேஷத்தில், பரலோகத்தைப் பற்றிப் பேசும்போது கூறப்படும் இசைக்கருவிகள் பற்றிய விஷயம் என்ன?**

வெளிப்படுத்தின விசேஷத்தில் சுரமண்டலங்கள் பற்றிக் குறிப்பிடப்படுவது (5:8; 14:2, 3; 15:2) சபையில் இசைக்கருவிகள் பயன்படுத்தப்படுதலை நியாயப்படுத்துகிறதா? யோவான் கண்டவை கிறிஸ்தவ நடைமுறைகளாயிராமல், வேறு சில விஷயங்களைக் குறிக்கும் அடையாளங்களாயிருந்தன. அவர் பரலோகத்தில் ஒரு ஆட்டுக்குட்டி (5:6); குதிரைகள் (6:2-8); வெள்ளை அங்கிகள் மற்றும் குருத்தோலைகள் (7:9); மேகம் மற்றும் வானவில் (10:1); இடிமுழக்கம் (10:3); சூரியன், சந்திரன், மற்றும் பன்னிரண்டு நட்சத்திரங்கள் (12:1); சீயோன் மலை (14:1); மற்றும் பல உருவங்களும் இருக்கக் கண்டார். இவைகள் நேரடியாக இருப்பதாக எடுத்துக்கொள்ளப்படக்கூடாத அடையாளங்களாக உள்ளன.

யோவான், யூதத்துவ ஆராதனையின் அடையாளங்களைப் பயன் படுத்தினார், இவற்றில் எதுவும் கிறிஸ்தவ ஆராதனையின் பாகமாக இருப்பதில் லை: தூபவர்க்கம் நிறைந்த பொற்கலசங்கள் (5:8), பலி செலுத்துவதற்கான பீடம் (6:9), தேவாலயம் (7:15; 15:8), தூபங்காட்டும் பொற்கலசம் (8:3, 4), பொற்பீடம் (8:3, 5; 9:13), தூபவர்க்கத்தின் புகை (8:4), பலிபீடத்து நெருப்பு (8:5), பொற்பீடத்தின் நான்கு கொம்புகள் (9:13), உடன்படிக்கையின் பெட்டி (11:19), மற்றும் சீயோன் மலையில் கூடியிருந்த மக்கள் கூட்டம் (14:1). இவைகள், சுரமண்டலத்தைப் போன்றே, கிறிஸ்தவ ஆராதனையை அல்ல, ஆனால் பழைய ஏற்பாட்டு ஆராதனையுடன் தொடர்புடையவைகளாக உள்ளன.

பரலோகத்தில் உள்ள ஒவ்வொன்றும் ஆவிக்குரியதாகவும் மற்றும் நித்தியமானதாகவும் உள்ளது; ஏதொன்றும் பௌதீகமானதாகவும் தற்காலிகமானதாகவும் இருப்பதில்லை (2 கொரிந்தியர் 4:18). வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் தேவனுடைய சுரமண்டலங்கள் எனப்படுபவை (15:2) பௌதீகரீதியான சுரமண்டலங்களாக இருப்பதில்லை. தேவனை ஆராதிப்பதில் சுரமண்டலங்கள் இசைக்கப்பட்டதாக இம்மூன்று வசனப்பகுதிகளில் (5:8; 14:2, 3; 15:2) எதுவும் நிரூபிப்பதில்லை. பாடுதல் என்பது மாத்திரமே யோவானால் அடையாளப்படுத்தப்பட்ட ஒரே இசையாக உள்ளது. அவர் பல தண்ணீர்கள், இடிமுழக்கம், மற்றும் சுரமண்டலக்காரர்கள் ஆகிய ஒலிகளை ஒப்பிட்டார்

(14:2); ஆனால் தண்ணீர்கள், இடிமுழக்கங்கள், மற்றும் சுரமண்டலங்கள் ஆகியவை அங்கிருக்கவில்லை. இவ்விடத்தில் சுரமண்டலங்கள் பற்றிய குறிப்பிடுதல், மற்ற யூதத்துவ ஆராதனை நடைமுறைகளை நாம் பயன்படுத்த அதிகாரத்துவம் அளிக்காதிருப்பது போன்றே, இசைக்கருவிகளைப் பயன்படுத்துவதற்கும் அதிகாரத்துவம் அளிப்பதில்லை.

**இசைக்கருவிகளின் இசையைக் கூட்டுவதற்குக்
கிறிஸ்தவ சுதந்திரத்தை நாம் கொண்டுள்ளோமா?**

கிறிஸ்துவுக்குள் நாம் கொண்டுள்ள சுயாதீனம், நமது ஆராதனையில் இசைக்கருவிகளின் இசையைக் கூட்டுவதற்கு நமக்குச் சுதந்திரம் தருகிறதா? கிறிஸ்தவ சுயாதீனம் தேவனுடைய தேர்ந்துகொள்ளுதல்களுடன் கூடுதல்களை அனுமதிக்கிறது என்று யூகித்தலானது, 1 கொரிந்தியர் 10:23ல், பவுலின் விவாதத்தினுடைய சந்தர்ப்பப்பொருளைத் தவறாகப் புரிந்துகொள்ளுதலாக உள்ளது. அந்தப் பகுதியில், 10:18-33ல், பவுல் சட்டப்பூர்வமற்றதைப் பற்றியல்ல, ஆனால் சட்டப்பூர்வமானதைச் செய்தல் பற்றியே கலந்துரையாடினார். குறிப்பிட்ட சில நிபந்தனைகளில், நமக்குச் சட்டப்பூர்வமானவைகளாக உள்ள எல்லாவற்றையும் செய்வதில், நாம் ஞானமுள்ளவர்களாக இருக்க மாட்டோம். நம்முடன் இணைவு கொண்டுள்ளவர்களுக்கு நல்லது எது என்பதை நாம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும் (10:24).

சட்டப்பூர்வமான ஒவ்வொன்றையும் செய்தல் என்பது மற்றவர்களை எதிர்மறையாகப் பாதித்தது என்றால் அது நமக்கு விவேகமற்றதாக இருக்கும் (1 கொரிந்தியர் 10:31, 32). இயேசுவினால் போதிக்கப்படாத விஷயங்களை நாம் செய்ய வேண்டும் என்று பவுல் விவாதிக்கவில்லை. மாறாக, அவரால் அனுமதிக்கப்பட்டுள்ளவற்றைச் செய்வதினால் நாம் பிறருக்கு இடைஞ்சலாக இருப்போம் என்றால், அவற்றில் இருந்து நாம் விலகியிருக்க வேண்டும் என்றே போதித்தார்.

## தொகுப்புரை

பாடுதல் என்பது நமது ஆராதனையின் மாபெரும் அனுபவங்களில் ஒன்றை அளிக்க முடியும். பாடுதலில் நாம் தேவனைத் துதிக்கவும், மற்றவர்களை மேல் உயர்த்தி அறிவுறுத்தவும், நமது சொந்த ஆத்துமாக்களுக்குப் பக்திவிருத்தியூட்டவும் முடியும். பாடல்களின் மூலமாக நாம் கிறிஸ்தவ வாழ்வின் பல முகப்புகளைப் பகிர்ந்துகொள்ள முடியும். நமது துதி மற்றும் பாடலில் ஆராதனை ஆகியவற்றில் தேவனே நமது கவனக்குவிப்பைப் பெறுபவராக இருக்க வேண்டும்.

இயேசு அங்கீகரித்துள்ளவற்றை மாத்திரமே நாம் நமது ஆராதனையில் உள்ளடக்க வேண்டும். பாடுதல் என்பது மாத்திரமே கிறிஸ்தவர்களுக்குக் கட்டளையிடப்பட்ட ஒரே இசையின் வகையாக இருப்பதினால், நாம் இசைக்கருவிகளின் இசையையோ அல்லது மனிதரிடம் தோன்றிய மற்ற நடைமுறைகளையோ சேர்த்துக்கொள்ளக் கூடாது. தேவன் அங்கீகரித்துள்ளவற்றை நாம் நடைமுறைப்படுத்தினால் மாத்திரமே நமது ஆராதனை

அவருக்குப் பிரியமானதாக இருக்கும்.

---

குறிப்புகள்

[1]புதிய ஏற்பாட்டில் "பாடுதல்" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தைகள்: *ado* (எபேசியர் 5:19; கொலோசெயர் 3:16; வெளிப்படுத்தின விசேஷம் 5:9; 14:3; 15:3), *humneo* (மத்தேயு 26:30; மாற்கு 14:26; நடபடிகள் 16:25; எபிரெயர் 2:12), மற்றும் *psallo* (ரோமர் 15:9; 1 கொரிந்தியர் 14:15; எபேசியர் 5:19 ["கீர்த்தனம் பண்ணி"]; யாக்கோபு 5:13). [2]*American Heritage Dictionary*, 3d ed. (2001), s.v. "a cappella." [3]*The Oxford English Dictionary,* 2d ed. (1989), s.v. "a cappella." [4]Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature*, 3d ed., rev. and ed. Frederick W. Danker (Chicago: University of Chicago Press, 2000), 1096. [5]இப்புத்தகத்தின் பிற்பகுதியில் உள்ள "இன்றைய நாட்களில் ஆராதனை நடைமுறைகளுக்கான அதிகாரத்துவம்" என்ற துணைப்பாடத்தில் காணவும்.